**<u>மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயம்,</u>**
**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயர்,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**<u>இ.ம.எண்.1/2025 ன் எம்.சி.ஓ.பி. எண்.244/2022</u>**

1) திருமதி. கிருத்திகா

2) இளவர் அஷ்விதா

3) இளவர் மேக்னா

4) மஞ்சுளா

... மனுதாரர்கள்

..எதிர்..

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகம்,

வேலூர் – 632 001.

... எதிர்மனுதாரர்

இம்மனு 21.06.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:09 +0530

திரு. இரா. அருணாச்சலம், ஏ. இளங்கோவன், பி.கலைவாணி மற்றும் கே.செந்தில்குமார் ஆகியோர்  ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.ஜெ.பிராங்க்ளின் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 (3) ன் கீழ் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அவைகளை எம்.சி.ஓ.பி. மனுவில் ஆவணங்களாக ஏற்க அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

இம்மனுவின் முதல் மனுதாரர் எம்.சி.ஓ.பி. மனுவில் முதல் மனுதாரர். 24.09.2022 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன தன் கணவருக்கான இழப்பீட்டு பரிகாரம் கோரி, தனது பெயரிலும், 2ம் மற்றும் 3ம் மனுதாரர்களான தனது இளவர் மகள்கள் சார்பிலும், 4ம் மனுதாரரான

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:16 +0530

தனது மாமியாரின் சார்பிலும் மோட்டார் வாகன இழப்பீட்டு மனுவைத் (எம்.சி.ஓ.பி.) தாக்கல் செய்தார். எம்.சி.ஓ.பி. மனு தாக்கல் செய்தபோது, சில தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை. அவை தற்போது தான் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. ஆகையால், 1ம் மனுதாரர் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அவைகளை எம்.சி.ஓ.பி. மனுவில் ஆவணங்களாக ஏற்க, அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:-

இந்த மனு சட்டரீதியாகவோ அல்லது உண்மையின் அடிப்படையிலோ நிலைநிறுத்த முடியாதது. அனைத்து வாதங்களையும் ஆதாரமற்றவை. மனுதாரர் தேவையான ஆவணங்களை ஆரம்பத்தில் தகுந்த காரணமின்றி தாக்கல் செய்யத் தவறியுள்ளார். கடைசி நேரத்தில் நகல்படிகளை அறிமுகப்படுத்தி அவற்றின் உண்மைத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்க முயல்கிறார். ஆதாரங்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 (3) ன் கீழ் மனுதாரர் குறியீடு செய்ய

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:21 +0530

தவறியது இந்த வழக்கை மேலும் பலவீனப்படுத்துகிறது. ஆகையால், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இந்த மனு மனுதாரர்களால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் எம்.சி.ஓ.பி. மனுவில் மனுதாரர்கள் ஆவார். எம்.சி.ஓ.பி. மனுவானது 1ம் மனுதாரர் 24.09.2022 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன தன் கணவருக்கான இழப்பீட்டுப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் தனது தரப்பில் தற்போது கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அவற்றை எம்.சி.ஓ.பி. மனுவில் ஆவணங்களாக ஏற்று, குறியீடு செய்ய அனுமதி கோரி இந்த

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:26 +0530

மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தரப்பில் சில தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை. அவை தற்போது தான் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்தரப்பில், மனுதாரர்கள் உரிய ஆவணங்களை ஆரம்பத்தில் தகுந்த காரணமின்றி தாக்கல் செய்யத் தவறியுள்ளனர் என்றும், கடைசி நேரத்தில் நகல்படிகளை அறிமுகப்படுத்தி அவற்றின் உண்மைத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்க முயல்வதாகவும் ஆதாரங்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளன என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டு உள்ள போதிலும் மனுதாரர்கள் எம்.சி.ஓ.பி. மனு விசாரணை சமயத்தில் ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதால் உரிய காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ள பொருண்மைகள் ஏற்கத்தக்கவை. எனவே மோட்டார் வாகன இழப்பீட்டு மனுவை (எம்.சி.ஓ.பி.) முழுமையான தீர்வு காணும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:33 +0530

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:41 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u>**– இல்லை**

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.04 19:03:47 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>
இ.ம.எண்.1/2025 ன்
எம்.சி.ஓ.பி. எண்.244/2022
நாள் 04.07.2025
2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.